**செய்தி வெளியீடு எண்.393** **நாள்.28.5.2008**

**மக்கள் நல்வாழ்வுத் துறை**

## மருத்துவர்கள் மேற்பார்வையில் தடுப்பூசி வழங்குதல் – ஒரு விளக்க அறிக்கை

சமீபத்தில் திருவள்ளுவர் மாவட்டத்தில் தட்டம்மை தடுப்பூசி போடப்பட்டு நான்கு குழந்தைகள் இறந்தனர். அதையடுத்து, ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள், நகராட்சி மருந்தகங்கள், நகர்நல மையங்கள், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகள் மட்டுமல்லாது தொலைதூர கிராமங்களில் வாகனங்கள் மூலம் மருத்துவர்கள் மேற்பார்வையில் கடந்த மூன்று வாரங்களாக குழந்தைகளுக்கும், கர்ப்பிணிகளுக்கும் தடுப்பூசிகள் போடப்படுகின்றன. இதன் மூலம் சுமார் 8000–க்கு மேற்பட்ட அரசு மருத்துவ நிலையங்களிலும் கிராமங்களிலும் தடுப்பூசிகள் தற்போது போடப்பட்டு வருகின்றன. சுகாதாரம் மற்றும் மருத்துவத்துறையைச் சேர்ந்த நிபுணர்களை கலந்து ஆலோசித்த பிறகே, அரசு இந்த முடிவை எடுத்துள்ளது. கிராமங்களில் நடத்தப்படும் தடுப்பூசி முகாம்கள் படிப்படியாக அதிகரிக்கப்பட்டு வருகிறது.

கிராம சுகாதார செவிலியர் சங்கத்தின் ஒரு பிரிவினர் மாநிலத்தில் 1400 இடங்களில் மட்டுமே தடுப்பூசி போடப்படுவதாக தவறான தகவலை நாளிதழ்களுக்கு தெரிவித்து வருகின்றனர்.

1985 ஆம் ஆண்டு தடுப்பூசி திட்டம் தொடங்கும்போது தமிழகத்தில் வட்டாரத்திற்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அளவில் 385 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மட்டுமே செயல்பட்டுக்கொண்டிருந்தன. 700 மருத்துவ அலுவலர்கள் மட்டுமே பணியிலிருந்தனர். மக்களிடமும் தடுப்பூசி திட்டம் குறித்த விழிப்புணர்வும் குறைவாகவே இருந்தது. ஆகவே, மக்களை நேரடியாக நாடிச்சென்று அவர்கள் வாழுமிடத்திற்கே தடுப்பூசி திட்டத்தை செயல்படுத்த வேண்டிய அவசியம் அப்போது இருந்தது. தற்போது 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என 1421 ஆரம்ப சுகாதார நிலையங்கள் போதுமான கட்டிட வசதிகளுடன் உள்ளன. மற்றும் 1186 வாகனங்கள் உள்ளன. மேலும் 239 வாகனங்கள் விரைவில் வழங்கப்பட உள்ளன.

கடந்த 9.5.2008–ல் பொது சுகாதாரத்துறையைச் சேர்ந்த கிராம சுகாதார செவிலியர், பகுதி சுகாதார செவிலியர், மருத்துவ அலுவலர்கள், துணை இயக்குநர், இணை இயக்குநர்கள் மற்றும் மருத்துவக்கல்லூரி இயக்ககத்தைச் சேர்ந்த குழந்தை நல சிறப்பு மருத்துவர்கள், குழந்தைநல மருத்துவமனையின் இயக்குநர் மற்றும் பேராசிரியர் உள்ளிட்ட 26 பேர் கொண்ட தொழில் நுட்பக்குழு, மருத்துவர்கள் மேற்பார்வையில் தடுப்பூசி போடுவதை அங்கீகாரம் செய்துள்ளது. மேலும் வாரந்தோறும் ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்குட்பட்ட துணை சுகாதார பகுதியில் உள்ள கிராமங்களுக்கு வாகனம் மூலம் களப்பணிக்கு ஏற்பாடு செய்து மருத்துவரின் மேற்பார்வையில் கிராம சுகாதார செவிலியரால் தடுப்பூசி போடவும் இக்குழு சிபாரிசு செய்துள்ளது.

ஆரம்ப சுகாதார நிலையங்களில் தடுப்பூசி போட வரும் குழந்தைகளை மருத்துவர்கள் அங்கேயே பரிசோதித்து எடை எடுத்து குழந்தைகளின் வளர்ச்சியை கண்காணிக்கவும், தாய்மார்களுக்கு சுகாதார கல்வி அளிக்கவும், நோய்களுக்கு சிகிச்சை அளிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. குழந்தைகள் மாதம் ஒரு முறைதான் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கோ அல்லது கிராமத்தில் உள்ள முகாமிற்கோ வருகின்றனர். மருத்துவர் மேற்பார்வையில் தடுப்பூசி போடப்படும்போது குழந்தைக்கு மருத்துவரால் முழு உடல் பரிசோதனை செய்து கொள்ள நல்ல வாய்ப்பாக இது அமைகிறது. குழந்தைகளின் ஆரோக்கியத்தை கருத்தில் கொண்டு அவர்களை நோய்களிலிருந்து பாதுகாக்க அனைத்து தடுப்பூசிகளும் பாதுகாப்பாக போடப்பட வேண்டும் என்ற உயரிய நோக்கத்திற்காக இந்த முடிவு எடுக்கப்பட்டது.

கேரள மாநிலத்தில் பல வருடங்களாக ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள் மற்றும் முகாம்கள் வாயிலாக மருத்துவர்கள் மேற்பார்வையில் மட்டுமே குழந்தைகளுக்கு தடுப்பூசிகள் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

தடுப்பூசித்திட்டம் தொடங்கப்பட்ட போது பிசிஜி, டிபிடி போலியோ ஆகிய தடுப்பூசிகள் மட்டுமே போடப்பட்டு வந்தன. படிப்படியாக தட்டம்மை தடுப்பூசி சேர்க்கப்பட்டது. கடந்த ஆண்டு முதல் அனைத்து மாவட்டங்களிலும் மஞ்சள் காமாலை தடுப்பூசியும், குறிப்பிட்ட மாவட்டங்களில் ஜப்பானிய மூளைக் காய்ச்சலுக்கான தடுப்பூசியும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. நிமோனியா மற்றும் மூளைக்காய்ச்சல் தடுப்புக்கான Hib தடுப்பூசியும், குழந்தைகளின் பிறவி ஊனத்தை தடுப்பதற்காக ரூபெல்லா தடுப்பூசியும் விரைவில் சேர்க்கப்பட உள்ளன.

ஒவ்வொரு குழந்தைக்கும் 6 தடுப்பூசிக்கு மேல் போட வேண்டியுள்ளது. மேலும், தட்டம்மை, பிசிஜி, மூளைக்காய்ச்சல் (Japanese Encephalitis) ஆகிய தடுப்பு மருந்துகளை தனித்தனியே அவைகளுக்குண்டான கரைப்பானுடன் கரைக்கப்பட வேண்டும். இந்த கரைப்பான்களை தவறாக வேறு தடுப்பு மருந்தில் கலந்தாலோ அல்லது தவறான தடுப்பூசியை போட்டாலோ அபாயகரமான பின் விளைவுகள் உடனடியாக ஏறப்ட வாய்ப்புகள் உள்ளன. குழந்தைகளுக்குப் போடப்படும் தடுப்பூசிகளின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே போவதால் ஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள் தடுப்பூசி மருந்துகளை பரிசோதிக்கும்போது தவறுகள் நடைபெறும் வாய்ப்புகள் இருக்காது. எனவேதான் கிராமங்களில் கிராம சுகாதார செவிலியர்கள் தனியாக தடுப்பூசி போடாமல் மருத்துவரின் மேற்பார்வையில் போட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தடுப்பூசிகள் பாதுகாப்பானவை; உரிய மருத்துவப்பரிசோதனைகளுக்குப் பிறகே குழந்தைகளுக்கு தடுப்பூசிகள் வழங்குவது அவசியம். மருத்துவர் கண்காணிப்பில் முகாம்கள் நடத்துவது குழந்தைகளுக்கு மிகவும் நல்லது. அரிதினும் அரிதாக பின் விளைவுகள் ஏதேனும் ஏற்படுமானால் உடனடியாக மருத்துவரின் உதவியுடன் சிகிச்சையளிக்க இயலும்.

எனவே குழந்தைகளுக்கு தடுப்பூசி போடுவதில் முழு பாதுகாப்பு தேவை என்பதைக் கருத்தில் கொண்டும், தொலை தூரத்தில் உள்ள மக்கள் பயன்பெற வேண்டும் என்ற நோக்கத்திலும் மருத்துவரின் மேற்பார்வையில் அரசு மருத்துவ நிலையங்களிலும் கிராமங்களிலும் தடுப்பூசிகள் போடப்படுகின்றன. இந்த மாற்றம் பொதுமக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. சில கிராம சுகாதார செவிலியர் சங்க நிர்வாகிகளைத் தவிர கிராம சுகாதார செவிலியர்கள் அனைவரும் இந்த மாற்றத்தை பெரிதும் வரவேற்கின்றனர். மருத்துவர்கள் மேற்பார்வையில் தடுப்பூசி போடுவதை கிராம சுகாதார செவிலியர்கள் பாதுகாப்பாக உணர்கின்றனர். ஒரு சில சங்க நிர்வாகிகளின் தனிப்பட்ட வசதிகளைவிட குழந்தைகளின் நலனே மிகவும் முக்கியமாகும்.

ஆறு மாதங்கள் கழித்து மாவட்டம் தோறும் தற்போது நடைமுறைபடுத்தப்படும் தடுப்பூசி முறையை நிபுணர் குழு ஆய்வு நடத்தி குழு அளிக்கும் பரிந்துரைகளுக்கு ஏற்ப மாற்றங்கள் கொண்டுவரப்படும்.

மருத்துவர் மேற்பார்வையில் தடுப்பூசி போடும் திட்டத்தை இரண்டு கிராம சுகாதார செவிலியர்கள் சங்கங்கள் வரவேற்று அறிக்கை வெளியிட்டுள்ளனர். சமூக சமத்துவத்துக்கான டாக்டர்கள் சங்கமும் இந்த பாதுகாப்பான ஊசி போடும் முறையை ஆதரித்து **24.05.2008** தினமணி நாளிதழில் செய்தி வெளியிட்டுள்ளது. அவைகளுக்கான நகல்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. பெரும்பான்மையான சுகாதார செவிலியர்கள் இத்திட்டத்தை வரவேற்கின்றனர்.

வி.கு.சுப்புராஜ்
செயலாளர்.

********

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9